கீதாஞ்சலி பள்ளியின் சாதனை மாணவர்களுக்கு பாராட்டு

■ கீதாஞ்சலி பப்ளிக் பள்ளியில், பள்ளியளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

Dinamalar, dt:27.06.2026, pg.no:5

கோவை, ஜூன் 27–

கீதாஞ்சலி பப்ளிக் பள்ளியில், 2025–26 கல்வியாண்டு சி.பி.எஸ்.இ., பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற பத்தாம் மற்றும் பிளஸ் 2 வகுப்பு மாணவர்களை கவுரவித்து விருது வழங்கும் விழா நடந்தது. பள்ளி தலைவர் அழகிரிசாமி தலைமை வகித்தார்.

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவன துணை வேந்தர் பாரதி ஹரிசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

பிளஸ் 2 பொதுத்தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களைப்பிடித்த மாணவர்கள் பூர்னேஷ், அக்ஷயா, தமிழினியன் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது. பத்தாம் வகுப்பு தேர்வில், பிரிதர்ஷினி, தீக்ஷா, பிரனேஷ் ஆகியோரும் கவுரவிக்கப்பட்டனர்.

பாடவாரி முதலிடம், நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் மற்றும் அதிக பாடச் சராசரியை பெற்றுத் தந்த ஆசிரியர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.